ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2077/13 - 2018 ජුනි මස 25 වැනි සඳුදා - 2018.06.25

*2077/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கைத் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பு - திருத்தப்பட்ட இல. 02

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.11.29 ஆந் திகதிய 1995/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 2015.09.01 ஆந் திகதிய 1039/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் சேர்க்கப்படுவதுடன் அதிலுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை.

1. பக்க இலக்கம் 7A இன், 8 ஆம் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும் :-

8. **குறிப்பு** :

(i) இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்று ஐந்து (05) வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர் ;

(ii) தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கு மேலதிகமாக இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த அலுவலர்களுக்கும் மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தொடர்பான பாடநெறியைப் பூர்த்திசெய்ய முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு,
2018, மே 23.

7-297

1A - G 27935 — 17 (2018/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.